# அமைப்பியல் நோக்கில் தொல்காப்பியம்

## A Structuralist perspective of Tolkappiyam

**செ. யமுனா**

*முனைவர் பட்ட ஆய்வாளர்(முழு நேரம்) பதிவு எண் - 2023PHDFTTM02*
*தமிழ்மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை திராவிடப் பல்கலைக்கழகம்*
*சீனிவாசவனம், குப்பம் -517426*
*Email id-yamunanila99@gmail.com, ORCID-https://orcid.org/0009-0009-9505-2391*

**S. Yamuna**

*Research scholar (Full Time )Reg No- 2023PHDFTTM02 Department of Tamil Language And Translation Studies Dravidian University Srinivasavanam Kuppam-517426 AP, India*
*Email id-yamunanila99@gmail.com, ORCID- https://orcid.org/0009-0009-9505-2391.*

**Abstract**

Tolkappiyam has a long tradition in the history of Tamil grammar. Tolkappiyam did a great job of bringing all the ancient life and literary traditions of the Tamils to later times. In structuralism, a subject, an object or institution or anything about the political, social and economic system is examined in its components and its true nature and subtle rules would be pointed out. It is on this basis that the Russian structuralist Vladimir Prop examined Russian fairy tales and established that they consist of 31 components and that they have evolved into various stories. Similarly, the structuralist Levi Strauss established that binary oppositions play a major role in creating the world. The significant thing in this is that, like the principles of structuralism, Tolkappiyam also speaks of structure in another form. This study tries to establish that.

**Keywords:** Tolkappiyam, linguistic techniques, politics, life traditions

**ஆய்வுச்சுருக்கம்:**

தொல்காப்பியம் தமிழ் இலக்கண வரலாற்றில் நெடிய பாரம்பரியம் கொண்டது. தமிழரின் பழைய வாழ்க்கை மரபுகள், நூல் மரபுகள் யாவற்றையும் பிற்பட்ட காலத்தவர்க்கு கொண்டு சேர்த்த பெருமை தொல்காப்பியத்திற்கே உண்டு. அமைப்பியலைப் பொறுத்தவரை ஒரு பொருள் அல்லது நிறுவனம் அல்லது அரசியல் சமூகப் பொருளாதாரம் குறித்த எதையும் கூறு கூறுகளாக ஆராய்ந்து அதன் உண்மை தன்மையை மற்றும் நுண்ணிய விதிகளைச் சுட்டிகாட்டும். இந்த அடிப்படையில் தான் ரஷ்ய அமைப்பியலாளரான விளாடிமிர் பிராப் ரஷ்யத் தேவதைக் கதைகளை ஆராய்ந்து அவை 31 கூறன்களைக் கொண்டவை என்றும் அவையே பல்வேறு கதைகளாகப் பரிணமித்துள்ளன என்றும் நிறுவிக்காட்டினார். அதுபோலவே லெவிஸ்ட்ராஸ் என்ற அமைப்பியல் ஆய்வாளர் எதிரிணைகள் உலகை உருவாக்கியதில் மிகுந்த பங்கு கொண்டவை என்பதை நிறுவிக் காட்டினார். இதில் குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால் அமைப்பியல் கோட்பாடுகளைப் போலவே தொல்காப்பியமும் இன்னொரு வடிவத்தில் அமைப்பியலைப் பேசுகின்றது என்பதுதான். அதனை நிறுவிக் காட்டும் நிலையில் அமைகிறது இந்த ஆய்வு.

**கலைச்சொற்கள்:**

தொல்காப்பியம், மொழியியல் நுட்பங்கள், அரசியல், வாழ்க்கை மரபுகள்

**கட்டுரைச் சுருக்கம்::**

மனிதனின் நனவிலி ஆனது மொழி போல் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பார் பிரெஞ்சு உளவியல் பகுப்பாய்வாளர் லக்கான். மொழிக்கும், மனித சிந்தனைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. மொழி ஆய்வின் மூலம், மொழி எவ்வாறு சமூகத்தில் பயன்படுத்தப்படுகிறது, மொழி எவ்வாறு ஒருவருக்கொருவர் உறவுகளை வடிவமைக்கிறது என்பதைப் புரிந்துக்கொள்ள முடியும். மொழி பற்றிய ஆய்வு முக்கியத்துவம் பெறுவது தேசியம் எனும் கோட்பாடு உருவாக்கத்தின் போது ஆகும். ஆண்ட்ரசன்

போன்ற அறிஞர்கள் இதில் முக்கியத்துவம் பெற்றவர்களாக அறியப்படுகின்றனர். மொழிவாரியாக மாநிலம் பிரிக்கப்பட்ட போதும், அதற்கு முந்தியும் தமிழ்நாட்டின் எல்லைக்கோட்டினைத் தீர்மானிப்பதில் தொல்காப்பியம் என்கிற மொழி நூலின் சிறப்புப் பாயிரம் உதவியதை இங்கு உதாரணமாக சுட்டலாம். தமிழ்நாட்டின் எல்லை யாது என்று கேட்டால், " வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம் " என்ற தொல்காப்பியப் பாயிரத்தின் வரிகளே இன்றளவும் மேற்கோளாக காட்டப்படுகிறது.இன்றைய மொழியலார் குறிப்பிடும் மொழியியல் நுட்பங்கள் பல தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. அமைப்பியல் அடிப்படையிலேயே ஒரு சமூகத்தின் மனம் சார்ந்த சிந்தனை முறையை விளங்கிக் கொள்வதற்கு பயன்படும் ஓர் அணுகுமுறையாகும். தமிழரின் உறவு முறையில் ஓர் அமைப்பு இருக்கிறது. திருமண முறையில் ஓர் அமைப்பு இருக்கிறது. நமது சமூகத்தில் நீண்ட நெடுங்காலமாக நிகழ்ந்து வரும் அன்பளிப்பு பரிமாற்றத்தில் ஓர் அர்த்தத்துடன் கூடிய ஒழுங்கு இருக்கிறது. தமிழ்மக்களின் சிந்தனை முறை மிக விரிவான அமைப்பியம் சார்ந்தது. அதனை தொல்காப்பியதின் வழி நிறுவிகாட்டும் அடிப்படையில் இக்கட்டுரையானது அமைகின்றது.

**முன்னுரை**

மொழி குறித்த புராதனக் கற்பிதங்களை நீக்கிவிட்டுப் பார்த்தால், அது முதலில் தகவல் பரிமாற்றக் கருவியாக உருவாகிறது. அடுத்து,பேச்சு என்கிற அடிப்படையில் வளர்ச்சி அடைந்து எழுத்துக்களைப் பெற்ற மொழியாக உருவாகிறது. எழுத்துகள் வளர்ச்சி கண்ட அனைத்து மொழிகளுமே இலக்கணம் என்கிற அதன் இயங்குமுறை விதியாக்கத்தைப் பெறுவது இயல்பாகும். தமிழுக்கு அப்படியான இலக்கண நூல்களில் ஒன்று தொல்காப்பியம். அதுவே, காலத்தால் கிடைக்கப்பெறும் முந்து நூலாகும். காலத்தால் பழைமையானது தொல்காப்பியம் என்றால் காலத்தால் தற்காலத்தைச் சேர்ந்தது அமைப்பியல் கோட்பாடு ஆகும். தொல்காப்பியம் தமிழ் மொழியின் இலக்கணத்தை விவரிக்கிறது என்றால் அமைப்பியல் கோட்பாடு எல்லா துறைகளையும் ஆழமாக ஆராய்ந்து பார்க்கவும் அவற்றின் உண்மைகளை வெளிக்கொணரவும் பயன்படுகிறது. தற்காலத்தில் இலக்கியங்கள் அமைப்பியல் மூலம் ஆராயப்பட்டு வருவதால் பல புதிய உண்மைகள் புலப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தொல்காப்பியம் குறித்து அமைப்பியல் கோட்பாடு வழியாக ஆராயப்படுகின்றன.

ஆய்வின் நோக்கம்:

உலகப் புதுமைகளில் ஒன்றான தொல்காப்பியத்தின் முக்கியத்துவத்தை முன்னிறுத்திக் கொண்டு தொல்காப்பியம் அமைப்பியலைத் தனக்கே உரித்தான வகையில் பேசுகின்றது என்பதை நிறுவிக் காட்டுவதே நோக்கமாகும்.

"இலக்கியம் ஒரு புறப்பொருள். அதை அறிவார்ந்த விளக்கத்திற்கு உட்படுத்த முடியும் என்று வடிவத்திற்கு முதன்மை கொடுத்த உருவவியல் சிந்தனைகள் அமைப்பியலுக்கு வழியேற்படுத்திக் கொடுத்தன. உருவவியல் ரஷ்யாவில் தோன்றியது என்றால், அமைப்பியல் பிரெஞ்சு நாட்டில் தோன்றியது. இவ்வணுகுமுறையை முதலில் பயன்படுத்தியவர் மானிடவியல் அறிஞரான லெவிஸ்ட்ராஸ் ஆவார். இந்த அணுகுமுறையை பர்த் போன்ற அறிஞர்கள் இலக்கிய ஆய்வுக்கும் பயன்படுத்தத் தொடங்கினர். பிரான்சில் தொடங்கிய இந்த அமைப்பியல் அணுகுமுறையை அமெரிக்க திறனாய்வாளர்களும் கையாளத் தொடங்கிய போது, இது உலகம் முழுவதும் பரவிய ஓர் இலக்கியக் கோட்பாடாக மலர்ந்தது " என்கிறார் க.பஞ்சாங்கம்.

(இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், 2016,ப. 163)

அமைப்பியல் என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கதை, கவிதை, இலக்கியம் போன்றவற்றின் புறவடிவங்களுக்கு உள்ளே ஓர் உள் ஒழுங்கமைவு காணப்படும். இதனையே லக்கான் "வெளிப்படுபவைகளுக்கு அடியில் மற்றொரு ஒழுங்கான உள்தர்க்கம் இருக்கிறதென்றும், இந்த

உள்ளோடும் விதியைக் கண்டுபிடிப்பதே அமைப்பைக் கண்டுபிடிப்பதாகும்"என்கிறார். இவ்விடத்தில் இவர், உள்ளோடும் ஒழுங்கைதான் அமைப்பு என்று கூறுவதாக தமிழவன் குறிப்பிடுகிறார். (அமைப்பியலும் அதன் பிறகும், 2019,ப. 5)

"ஒரு முழுமையான இலக்கியப் படைப்பின் பகுதிகளுக்கிடையே நிலவும் உறவுகளின் திரட்சே கட்டமைப்பாகும்" என்று மேலை இலக்கியச் சொல்லகராதி குறிப்பிடுகிறது.

அடிப்படையில், இலக்கணமும் மொழியியலும் பார்க்க ஒன்று போல் பட்டாலும், இலக்கணம் என்பது ஒரு மொழியின் அடிப்படைகளைத் தர்க்கப்பூர்வமாக விளக்கும் துறையாகும். மொழியியல் அறிஞர்கள் இலக்கியத்தினை, குறி – குறிப்பான் - குறிப்பிடு பொருள் என்று பாகுப்படுத்துகின்றனர். குறி தன்னையும் சுட்டி, பிரிதொரு பொருளையும் சுட்டி இருதள இயக்கத்தை செயல்படுத்துகிறது. தொல்காப்பியர் இதனைச் சொன்மை (தன்னைச் சுட்டுவது) ,பொருண்மை (பிரிதொன்றை சுட்டுவது )என விளக்கியுள்ளார். இலக்கியப் பிரதியின் பல்வேறு உறுப்புகளான சொல், வாக்கியம், அரைபுள்ளி, தலைப்பு போன்றன குறி என்றும், இவற்றின் சேர்க்கை மொத்தம் இலக்கியம் எனச்சுட்டுவது குறிப்பான் என்றும்,அதன் பொருள் குறிப்பீடு என்றும் புரிந்துக்கொள்ள முடியும் என்கிறார், தமிழவன். சசூர் மொழி என்பது சப்தக் குறிகளின் இணைப்பாலான அமைப்பு என்கிறார். சொல் என்பது ஒரு குறி, இத்தகைய பல குறிகளின் இணைப்பாலான அமைப்பே மொழி. இலக்கிய படைப்பில் மொழி இல்லையென்றால் உருவமிருக்க முடியாது. உருவம் இல்லையெனில் நூலும் இலக்கியமாய் இருப்பதில்லை. உருவமும் மொழியும் இயக்கவியல் அடிப்படையில் செயல்படுகிறது. ஒரு முழுமையின் உறுப்புகள் பல தளங்களில் தம்முள் உறவு கொண்டிருக்கும். இலக்கியத்தை ஒரு குறிப்பிட்ட அடிப்படைகள் கொண்ட உற்பத்தி என்றே அமைப்பியல் கருதுகிறது. இலக்கியத் திறனாய்வு தான் அணுகுகிற எழுத்தைப் பகுத்தும், தொகுத்தும், துண்டு துண்டாக்கி அலசிப்பார்ப்பதும் தவறல்ல என்ற எண்ணம் அமைப்பியலாளர்களிடம் தொடர்ச்சியாக காணப்படுகின்றன.

பழைய தத்துவங்களிலும் இலக்கியக் கொள்கைகளிலும் அமைப்பிய முற்கூறுகள் பல காணப்படுகின்றன. தத்துவம், விமரிசனம் இவற்றில் இருபதாம் நூற்றாண்டில் இருந்த மொழிச்சார்பு அமைப்பு என்பதைத் தனியானதோர் அர்த்தத்தில் முன் வைத்தது. அரிஸ்டாட்டிலின் கவிதையியல் நூலில் முன் - அமைப்பியக் கூறுகள் இருப்பதைக் காணலாம். கதைப்பின்னல்களை அவர் எளிய கதைப்பின்னல்கள், தலைகீழாதல் சேர்ந்த கதைப் பின்னல்கள், கண்டறிதல் இணைந்த கதைப்பின்னல்கள், தலைகீழாதலோடும் கண்டறிதலோடும் இணைந்த கதைப் பின்னல்கள் என்று வகைப்படுத்திய பார்வையிலேயே அமைப்பியல் சிந்தனைத் தெரிகிறது. இதைப்போலத் தமிழிலும், தொல்காப்பியர் வாழும் சூழல்களின் அடிப்படையில் நிலப்பகுதிகளை (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) ஆகிய ஐவகை பிரிவுகளாகப் பிரித்து, அந்தந்த நிலங்களுக்குரிய தாவரங்கள் மற்றும் பூக்களை அந்தந்த நிலங்களுக்குப் பெயர்க்காரணங்களாக நுட்பத்துடன் அமைத்துள்ளார். நிலங்களை வகைப்படுத்தி அந்நிலங்களை அடிப்படையாகக் கொண்டே மானிட ஒழுக்கங்களைத் திணைகளாக அமைத்து இருப்பதில் தொல்காப்பியரின் அமைப்பியச் சிந்தனை தெளிவாக தெரிகிறது. அகம் -புறம் என்ற சிந்தனையில் ஒரு எதிர்வுப் பண்பு இருக்கிறது.அகம்-புறம் என்னும் துருவ இணைகளை எல்லா இடங்களிலும் நிரம்பிய ஒன்றாகக் கையாளுவதிலும் அமைப்பியச் சிந்தனை உள்ளது. இரவு - பகல், கிழக்கு -மேற்கு, மேல் - கீழ், இன்பம் - துன்பம் போன்ற ஆயிரமாயிரம் எதிரிணைகள் ஒவ்வொரு மொழியிலும் அர்த்தக் குறியீடுகளாக உருவாக்கம் பெற்றுள்ளன. எதிரிணைகள் வழி அந்தந்த அமைப்புக்குரிய அர்த்தங்களைத் தேடுதல் எளிமையானது. எதிரிணைகள் தாண்டியும் அமைப்புக்கான அர்த்தங்கள் புதைந்து கிடக்கின்றன. அகத்திணைகள் ஏழினுக்கும் புறத்திணைகளைத் துருவ இணைகளாக அமைத்திருப்பதிலும் தொல்காப்பியரின் அமைப்பியல் சிந்தனையை அறிய முடிகிறது. தமிழ் இலக்கண நூல்கள் பேசும் அகம்-புறம் எனும் கருத்துக்கள், அமைப்பியல் சார்ந்த கருத்துக்கள் லெவிஸ்ட்ராஸ் கூறும் இருமை எதிரிணைவு கோட்பாட்டைப் பிரதிபலித்து நிற்கின்றன. இவற்றை தொல்காப்பியத்தில் காணமுடிகிறது.எழுத்ததிகாரத்தில் நூன்மரபு, மொழி மரபு,பிறப்பியல் ஆகிய மூன்று இயல்களை முதலில்

பொதுநிலையிலும் இதற்கு முரணாக, அடுத்து வரும் ஆறு இயல்களைப் புணர்ச்சிக்கெனவும் அமைத்திருப்பதில் அமைப்பியச் சிந்தனை உள்ளது. இவ்வாறே சொல்லதிகாரத்தில் முதலில் வேற்றுமைக்கும் - பின்னர் சொற்களின் அமைப்பிற்கும் உரிமை தந்து இயல்களை அமைத்திருப்பதிலும் அமைப்பியச் சிந்தனையை காணமுடிகிறது. சொற்களை வகுக்கும்போதும், பெயரையும் வினையையும் வெறுமனே பெயராக அமைவது, செயலாக அமைவது என்றெல்லாம் கூறாமல், பெயர் வேற்றுமை கொள்வது - காலம் ஏற்காதது என்றும், வினை வேற்றுமை கொள்ளாதது - காலம் ஏற்பது என்றும் முரண்படுத்திக் காட்டுவதில் தீவிரமான அமைப்பியச் சிந்தனையை காணமுடிகிறது. இவ்வாறே பல இயல்களில் மொழிப் பண்புகளை வாய்ப்பாட்டு அடிப்படையிலும், சிலவற்றைத் தொடர் அடிப்படையிலும் விளக்கிக் காட்டியிருப்பதும் தொல்காப்பியரின் அமைப்பியல் சிந்தனையைக் காட்டுகிறது என்கிறார், க. பூரணச்சந்திரன்.

(அமைப்பியமும் பின் அமைப்பியமும், 2009,ப. 27,28)

தொல்காப்பியம் அமைப்பியல் அடிப்படையிலான ஒரு நூல் என்பதை அண்மைக்கால மொழியியல் ஆய்வுகள் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளன. தொல்காப்பியர், முதலில் தன் நூலான இலக்கணத்திற்குத் தேவையான எழுத்து முதலியவற்றைக் கூறிய பின்னரே, அடுத்ததாக அந்த எழுத்துக்களால் சொற்கள் உருவாகும் மரபுகளைக் கூறியுள்ளார். இந்த மொழியின் மரபுகளிலும் தெளிவான அமைப்பியச் சிந்தனை உள்ளது. முதலாவதாக, மகரக் குறுக்கம் என்று ஒன்று உண்டு எனவும் அதன் அளவையும் நூன் மரபில் குறிப்பிட்டுள்ளார். அடுத்ததாக, மகரம் குறுகுவது அது வரும் இடத்தைப் பொருத்தது - போன்ம், சென்ம் போன்ற மொழிவுகளில் வருவது. இதுவும் தமிழ்மொழியின் மரபே ஆகும். இதனை மொழி மரபில் வைத்தார். எனவே,மரபுகளாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவைகளை நூலுக்கு உரியனவா,மொழிக்கு உரியனவா என்பதையும், அம்மரபுகள் தேவையான அளவுக்கு மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருக்க வேண்டும் என்பதையும் தொல்காப்பியர் நன்கு அறிந்து செயல்பட்டுள்ளார். நூற்பா வைப்புமுறையில் தொல்காப்பியர் நூல் மரபில் முதலில் தனக்கு வேண்டிய வரையறைகளை வகுத்துக் கொள்கிறார். அவர் கொடுத்திருக்கும் வரையறைகளில் முறையான அமைப்பியச் சிந்தனைகள் உள்ளன. அவையாவன,

1. எழுத்து - நூற்பா(1 )
2. சார்பெழுத்து- நூற்பா ( 2)
3. குற்றெழுத்தும் அவற்றின் அளபும் - நூற்பா (3)
4. நெட்டெழுத்தும் அவற்றின் அளபும் - நூற்பா (4)
5. மூவளபு இசைத்தல் - நூற்பாக்கள் (5,6)
6. மாத்திரை - நூற்பா (7)
7. உயிர் எழுத்து - நூற்பா (8)
8. மெய்யெழுத்து - நூற்பா (9)

உயிர், மெய் ஆகிய எழுத்துக்களைப் பற்றிய வரையறையை சற்று பின்னாக அமைத்திருப்பதை குறையென சிலர் கருதுகின்றனர். ஆனால்,தொல்காப்பியரின் நோக்கம் தமிழ்மொழி அமைப்பும் சமஸ்கிருத மொழியமைப்பும் வேறு வேறு என்பதைத் தெளிவாக காட்டுவதேயாகும். இதனால்தான் நூன்மரபில் மாத்திரைக்கும், அளபெடைக்கும் முக்கியமான இடத்தைக் கொடுத்து 3, 4, 5, 6 ஆவது நூற்பாக்களில் இவற்றைக்கொண்டு வந்து வைக்கிறார். ஓர் ஒழுங்குசார் அமைப்பு என்பது ஒரு மொழியைப் போன்றது. அதன் குறியீடுகள் மொழியின் எழுத்துகளைப் போன்றவை. அதனை உருவாக்கும் விதிமுறைகள் மொழியின் இலக்கணத்தின் விதிகளைப் போன்றது. ஓர் ஒழுங்குசார் அமைப்பு ஒரு மொழியைப் போன்றது என்ற இன்றைய கணிதவியலாரின் கொள்கைகளுடன் முற்றிலும் ஒத்துப்போகும் வகையில் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மொழியின் இலக்கணத்தை ஓர் ஒழுங்குசார் அமைப்பாக உருவாக்கியிருக்கும், தொல்காப்பியரின் திறம் எண்ணந் தோறும் திகைக்கவைக்கிறது. அதேபோல்,

தொல்காப்பியம் எழுத்தைப் பற்றியும் சொல்லைப் பற்றியும் வாக்கியத்தைப் பற்றியும் பேசுவதன் தொடர்ச்சியாகவே கவிதையைப் பற்றிய உவமை, மெய்ப்பாடு இவற்றைப் பற்றியும் பேசுகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

தொல்காப்பியத்தை நிறைவு செய்யும் இயலான மரபியல் நமது முன்னோர்களின் மொழிமரபு வலிமையானது என்பதை விளக்குகிறது.மரபாவது இறுதிணைப் பொருளையும் இருவகை வழக்கினும் சான்றோர் தொன்றுதொட்டு வழங்கிவருதாகும்.மரபு என்னும் இச்சொல் இலக்கணம் என்ற பொருளிலும் தொன்றுத்தொட்டு பொருளுக்கு உயர்ந்தோர் – அறிஞர்கள் - சொற்களை வழங்கி வந்த முறையே வழக்கு. எனவே

தொல்காப்பியர்,

வழக்கெனப்படுவ உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட்டாக லானே (தொல். பொருள். 638)

என்று குறிப்பிடுகின்றார்.

நூல்களில் மரபுநிலை திரியாதவாறு சொற்களைக் கையாளுதல் வேண்டும் என்பதை இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் பலரும் வற்புறுத்துவது தொல்காப்பியர் காலத்திலேயே நடைமுறையில் இருந்துள்ளதை,

மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபு வழிபட்ட சொல்லி னான (தொல். பொருள். 636)

மரபு நிலை திரியின் பிறது பிறிதாகும் (தொல். பொருள். 637)

என்னும் நூற்பாக்கள் சுட்டுகிறது.

தொல்காப்பியரின் காலத்திற்கு முன்னமே பாடல்களின் அமைப்புகளை ஆராய்ந்து, அவற்றின் உறுப்புகளை வரையறை செய்துள்ளனர்.

"நல்லிசைப் புலவர் செய்யுள்
உறுப்பென
வல்லிதிற் கூறி
வகுத்துரைத்தனரே"

என்பனார் புலவர், தொல்காப்பிய தொடரால் அறியலாம். பொருளதிகாரத்தில் பேசப்படும் செய்யுள் உறுப்புகள் கவிதையின் கட்டமைப்புத் தன்மையினை விளக்குவதாக அமைகின்றது. இது அமைப்பியலாளர் குறிப்பிடுகின்ற "ஒட்டுமொத்தம்" என்ற நிலையினோடு தொடர்புடையனவாக உள்ளது.இவை போன்ற பல புதிய முடிவுகள் அமைப்பியல் வழி வெளிப்படுத்தப்படுகின்றன.

**முடிவுரை:**

அமைப்பியல் மனித பண்பாட்டுத் துறைகளில் சக்தி வாய்ந்த அறிவாராய்ச்சி முறையாக விளங்குகிறது. தனிமனித விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட புறவயமான அணுகுமுறையாக கருதப்படுகிறது. இலக்கியத்தை ஒரு அறிவார்ந்த விளக்கத்திற்கு உட்படுத்த முடியும் என்பதை வலியுறுத்துகிறது. ஒரு முழு அமைப்பைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து அச்சிறு பகுதிகளுக்கு இடையேயுள்ள உறவையும் அப்பகுதிகளுக்குள் மறைந்திருக்கும் கருத்துக்கூறுகளையும் ஆராய்வது அமைப்பியலின் பாற்படும். அந்த வகையில் தொல்காப்பிய நூற்பாக்களை அமைப்பியல் ஆய்விற்கு உட்படுத்துகின்றபோது தொல்காப்பியம் அமைப்பியலை 2000 ஆண்டுகளுக்கு முன்பே இலக்கியத்திற்கேற்ப விளக்கியுள்ளதை அறிய முடிகின்றது.இவை போன்ற பல புதிய முடிவுகள் அமைப்பியல் வழி வெளிப்படுத்தப்படுகின்றன.

**பார்வை நூல்கள்:**


1. நடராசன். தி.சு., திறனாய்வு கலைக் கொள்கைகளும் அணுகுமுறைகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2016.
2. பஞ்சாங்கம். க., இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் -அகரம் வெளியீடு, தஞ்சாவூர், 2016.
3. தமிழவன், பழந்தமிழில் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2009.
4. தமிழவன், அமைப்பியலும் அதன் பிறகும், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2019.
5. ஸ்டீபன் .ஞா., அமைப்பில் கோட்பாடும் ஆய்வுகளும் ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2013.
6. பூரணச்சந்திரன் க., அமைப்பியமும் பின் அமைப்பியமும், அடையாளம் பதிப்பகம் ,திருச்சி, 2009.
7. யரோஸ்லவ் வாச்சக், சங்க இலக்கியத்தில் இயற்கை குறியீடு ஐந்திணை மலர்களும் மரபுகளும், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2015 .
8. பாலசுந்தரம் .ச., தொல்காப்பியம் ஆராய்ச்சி காண்டிகையுரை .(தொகுதி- 1, தொகுதி- 2, தொகுதி- 3, பகுதி -3), பெரியார் பல்கலைக்கழகம், சேலம், 2012.


## References


1. Nadarasan.T.S., Thiranaivukalai kolgaikalum anugumuraigalum, New century Book House, Chennai, 2016.
2. Panchangam.K, Illakkiyamum Thiranaivuk kotpaduKalum,Annam-agaram publication, Thanjavur, 2016.
3. Thamizhavan,pazhanthamizhil amaipiyal matrum kuriyiyal Aaivugal,Ulaga Tamizh Aaraichi Niruvanam,சென்னை, 2019.
4. Thamizhavan, Amaipiyalum adhan piragum, Adayalam publication, Trichy, 2019.
5. Steephen.G,Amaipiyal kotpadum Aaiyvukalum ,New century Book House, Chennai, 2013.
6. Poornachandran.K, Amaipiyamum pin Amaipiyamum, Adayalam publication, Trichy, 2009.
7. Yaroslaw Wachak, Sanga Illakiyathil Eyarkkai kuriyeedu, Adyalam publication,Trichy, 2015.
8. Balasundaram.S, Tholkappiyam Aarayichi kaandigai urai Part-1,2,3, Periyar University, Salem, 2012.


License : Copyright (c) 2025 Author
This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.